டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 30.12.2024 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 26 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 160 - Madurai | Online Edition

# தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு!

சென்னை, டிச.30

தமிழகத்தில் மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகள் மற்றும் அதனை ஒட்டிய பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதிகளில் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சி நிலவுகிறது.




இதன் காரணமாக இன்று தென்தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வடதமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் ஒரிரு இடங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும்.

நாளை 1-1-25 முதல் 5-1-25 வரையிலான நாட்களில் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை பொறுத்தவரையில், அடுத்த 24 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில், லேசானது / மிதமான மழை பெய்யக்கூடும். அதிகாலை வேளையில் லேசான பனி மூட்டம் காணப்படும்.

# மேச்சேரி வட்டார விவசாயிகளுக்கு முக்கிய அறிவிப்பு



சேலம், டிச.30

வரும் ஜனவரி மாதத்தில் அனைத்து சேலம் மாவட்டம், மேச்சேரி வட்டாரத்தில் விவசாயிகளின் பதிவு அதாவது ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு அடையாள எண் ஏற்படுத்துவதற்கான பதிவு நடைபெற உள்ளது. மேலும் மேச்சேரி வட்டாரத்தில் உள்ள ஒவ்வொரு வருவாய் கிராமத்திற்கும் ஒரு தேதி ஒதுக்கப்பட்டு அந்த நாட்களில் நமது வேளாண்மை துறையைச் சார்ந்த அலுவலர்கள் மற்றும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்ட பணியில் உள்ள அலுவலர்களும் தங்கள் பகுதிக்கு வர உள்ளார்கள். அது சமயம் நமது விவசாயிகள் தங்களுடைய விபரங்களை கூறி அடையாள எண் ஏற்படுத்த உதவிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் இந்த அடையாள எண் ஒவ்வொரு விவசாயிக்கும் ஆதார் எண் போன்றது இந்த அடையாள எண்ணை வைத்துத்தான் வரும் காலங்களில் விவசாயத் துறையிலோ அல்லது விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு தேவையான நலத்திட்டங்களை பெறுவதற்கோ விவசாயத் துறையில் பயன்படுத்தப்படும் செலவினங்களுக்காக வங்கியில் கடன் பெறுவதற்கோ பயன்படுத்த வேண்டும். எனவே அனைத்து விவசாயிகளும் தவறாது தங்கள் பகுதியில் நடைபெறும் முகாமில் கலந்து கொண்டு தங்கள் விவரங்களை கொடுத்து விவசாயிகளுக்கு ஆன அடையாள எண் ஏற்படுத்த உதவிடுமாறு உங்கள் அனைவரையும் மேச்சேரி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், ஷீரின் தெரிவித்துள்ளார்.

மேலும் விபரங்களுக்கு மேச்சேரி வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தை அனுகவும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் ஓசூர் சங்கர் பயோ டெக் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்



கோயம்புத்தூர், டிச.30 தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில் நுட்ப மையத்தின் தாவர உயிரித்தொழில் நுட்பத்துறை, கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் உள்ள சங்கர் பயோ–டெக் நிறுவனத்துடன் 27.12.24 அன்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

பதிவாளர் முனைவர் இரா.தமிழ்வேந்தன், தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மைய இயக்குனர் ந.செந்தில், திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு இயக்குனர், முனைவர் ஜெயக்குமார், தாவர உயிரி தொழில் நுட்பத் துறையின் பேராசிரியர் மற்றும் தலைவருமான முனைவர் ஈ.கோகிலாதேவி மற்றும் சங்கர் பயோ–டெக் நிறுவனத்தின் உரிமையாளர் ஆர்.சங்கர் மற்றும் சங்கர் பயோ–டெக்கின் தொழில்நுட்ப இயக்குனர் முனைவர் சி.இளையபாலன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திடும் பணியை உயிரி தொழில்நுட்ப இணை பேராசிரியர் முனைவர் சு.இராஜேஷ் ஒருங்கிணைத்தார். ஓசூரில் உள்ள சங்கர் பயோ–டெக் நிறுவனம் வணிக முக்கியத்துவம் வாய்ந்த தோட்டக்கலைப் பயிர்களின் தரமான திசு வளர்ப்பு கன்றுகளை உற்பத்தி செய்வதில் முன்னணியில் உள்ளது மற்றும் நாடு தழுவிய விநியோக வலையமைப்பைக் கொண்டுள்ளது. தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தின் தாவர திசு வளர்ப்பு ஆய்வகங்களில், வாழையில் தரமான திசு வளர்ப்பு கன்றுகளை உற்பத்தி செய்து மீள் கொள்முதல் வழிமுறையின் மூலம் வழங்குவதற்காக தற்போதைய புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டு உள்ளது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.


Rithvik® Pipe
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# பழங்குடியின பெண் விவசாயிகளை தொழில்முனைவராக்க புளி மதிப்பு கூட்டல் பயிற்சி



திருவண்ணாமலை, டிச.30

இந்திய அரசின் சுற்றுச்சூழல் வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் கீழ் இயங்கும் கோவை வன மரபியல் மற்றும் மர வளர்ப்பு நிறுவனம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் மற்றும் விவேகானந்தா அறக்கட்டளை இணைந்து நடத்திய புளி மதிப்பு கூட்டல் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் தமிழ்நாடு அரசு பழங்குடியினர் நலத்துறை விவேகானந்தா அறக்கட்டளை திருவண்ணாமலை மூலம் செயல்படுத்தப்படும் தொல்குடியினர் வேளாண் மேலாண்மை திட்டம் ஐந்திணை ஜவ்வாது மலைவாழ் பழங்குடியினர் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக புளி மதிப்பு கூட்டல் திட்டப் பயனாளிகள் கலந்து கொண்டனர். பயிற்சி முகாமுக்கு வன மரபியல் மற்றும் மர வளர்ப்பு நிறுவன இயக்குனர் முனைவர் குன்னி கண்ணன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முனைவர் நாகராஜன் ஆராய்ச்சி ஒருங்கிணைப்பாளர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் அறுவடை பின்சார் தொழில்நுட்ப மையத்தின் பேராசிரியர் கார்த்திகேயன் கலந்து கொண்டு தொடக்க உரையாற்றினார். பயிற்சி முகாமில் கலந்து கொண்ட அனைத்து பழங்குடியின பயனாளிகளுக்கும் புளி மதிப்பு கூட்டல் முறை புளி மிட்டாய் , ஜாம், ஜூஸ், புளி சாதம் தயாரிப்பிற்கான பவுடர் ஆகியவை குறித்து விரிவாக பயிற்சி அளிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டை வன மரபியல் மற்றும் மரம் வளர்ப்பு நிறுவன விஞ்ஞானி மாயவேல் ஏற்பாடு செய்திருந்தார். இந்நிகழ்ச்சியில் விவேகானந்தா அறக்கட்டளை தலைவர் முனைவர் பாலு, விஞ்ஞானிகள் பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இத்தகவலை முனைவர் நாகராஜன் ஆராய்ச்சி ஒருங்கிணைப் பாளர் தெரிவித்துள்ளார்.

| கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் | | | | | | 30.12.2024 | |
|---|---|---|---|---|---|---|---|
| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 34 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 38 | 57 | உருளை (பிற) | 30 | 36 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 50 | 57A | உருளை(ஊட்டி) | 36 | 48 |
| 2 | வெண்டை | 45 | 48 | 58 | மேரக்காய் | 22 | 26 |
| 3 | தக்காளி (நாடு) | 17 | 20 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 34 | 38 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 16 | 19 | 60 | கேரட் | 50 | 55 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 60 | 66 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 60 | 70 |
| 6 | புடலை | 25 | 30 | 62 | நூல்கோல் | 40 | 46 |
| 7 | பீர்க்கன் | 48 | 54 | 63 | டர்னிப் | 35 | 40 |
| 8 | சுரைக்காய் | 25 | 28 | 64 | மு.கோஸ் | 25 | 28 |
| 9 | பாகற்காய் | 35 | 38 | 65 | மு.கோஸ்(கலர்) | | |
| 10 | கொத்தவரை | 40 | 45 | 66 | காளிபிளவர் | 44 | 48 |
| 11 | பூசணி | 14 | 16 | 67 | பட்டாணி | 70 | 80 |
| 12 | அரசாணி | 16 | 20 | 68 | பூண்டு | 200 | 288 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 40 | 48 | 69 | இஞ்சி | 46 | 90 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 55 | 62 | 70 | புருக்கோலின் | 150 | 185 |
| 15 | சி.வெங்காயம் | 65 | 70 | 71 | பென்னி பீன்ஸ் | 60 | 70 |
| 16 | பெ.வெங்காயம் | 32 | 37 | 72 | குடமிளகாய் | 60 | 65 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 34 | 38 | 73 | ஊட்டி அவரை | 100 | 130 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 60 | 74 | பஜ்ஜி மிளகாய் | | |
| 19 | முருங்கை | 110 | 130 | 71A | | | |
| 20 | தேங்காய் | 55 | 60 | | | | |
| 21 | மாங்காய் | 70 | 75 | | | | |
| 22 | வாழைக்காய் | 30 | 34 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 40 | 43 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 55 | 60 | 75 | எலுமிச்சை | 60 | 65 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 40 | 50 |
| 26 | மரவள்ளி | 25 | 30 | 77 | சப்போட்டா | 45 | 50 |
| 27 | சர்க்கரைவள்ளி | 40 | 45 | 78 | பப்பாளி | 30 | 34 |
| 28 | கறிவேப்பிலை | 70 | 74 | 79 | மாதுளை | 120 | 180 |
| 29 | கொத்தமல்லி | 30 | 35 | 80 | திராட்சை | 60 | 70 |
| 30 | புதினா | 8 | 9 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 18 | 20 | 82 | ஆப்பிள் (சிம்லா/காலா) | 140 | 200 |
| 32 | தண்டுக்கீரை | 18 | 20 | 83 | ஆரஞ்ச் | 50 | 70 |
| 33 | சுக்கிட்டி&பாலாக்கு | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 60 | 70 |
| 34 | அரைக்கீரை | 18 | 20 | 85 | அன்னாசி பழம் | 50 | 55 |
| 35 | சிறுகீரை | 18 | 20 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | வெந்தயக்கீரை | 20 | 25 | 87 | முலாம்பழம் | 45 | 50 |
| 37 | பருப்புக்கீரை | 18 | 20 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 45 | 50 |
| 40 | கோவக்காய் | 54 | 58 | 91 | பூவன் | 35 | 38 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 45 | 50 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 35 | 38 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 30 | 35 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 25 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 30 | 34 | 96 | நேந்திரன் | 70 | 74 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 40 | 45 | 97 | செவ்வாழை | 70 | 80 |
| 47 | சுண்டக்காய் | 150 | 160 | 98 | பேரிக்காய் | 150 | 165 |
| 48 | வெங்காயத்தாள் | 10 | 12 | 99 | நார்த்தங்காய் | | |
| 49 | காளிபிளவர் (உள்ளூர்) | | | 100 | கறிப்பலா | 40 | 44 |
| 50 | நிலக்கடலை | 60 | 64 | 101 | டிராகன் ப்ரூட் | 140 | 150 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 70 | 78 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்விட் கான் | 35 | 40 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 35 | 38 | | | | |
| 55A | துவரை | | | | | | |

# மண்புழு குளியல் நீர் தயாரிப்பு முறை

மண்புழு குளியல் நீர் பயிர் மேல் தெளிக்கக்கூடிய நீராகும். இதனை தெளிப்பதால் பயிர்களின் வளர்ச்சி அதிகரிக்கும். ஆனால் செலவு சிக்கனமானது. காய்கறிகள், பழங்கள் போன்ற பயிர்களுக்கு இதனை தெளிப்பதன் மூலம் தரம், எடை ஆகியவற்றை அதிகரிக்க செய்வதோடு நீண்ட நாள் கெடாமல் வைத்திருக்கவும் முடியும். திறட்சியான காய்களும், பழங்களும் கிடைக்கும். மழைக்காலங்களில் பயிர்களின் மேல் தெளிக்க முடியாத சூழ்நிலையில், இதனை வேர்ப்பகுதியில் மண்ணில் ஊற்றுவதன் மூலம் நல்ல பலன் பெற முடியும்.

## தயாரிப்பு முறை

சுமார் 200 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு பேரலை எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த பேரலின் உள்பகுதியின் அடிப்பாகத்தில் முதலில் பெரிய கற்களை இட்டு அதன் மீது சிறிய கற்களை இட வேண்டும். அதற்கும் மேலே ஆற்று மணலை போட வேண்டும். மேற்கண்ட யாவற்றையும் தண்ணீரில் ஈரப்படுத்தி இடுவது மிகவும் அவசியம். இவ்வாறு பெரியகல், சிறிய கல், மணல், வளமான நிலத்து மண் ஆகியவற்றை இட்ட பின்பு அதற்கு மேல் ஓரளவு மக்கிய இலை, தழை குப்பைகளைப் பரப்ப வேண்டும். அதன் பிறகு 200 நாட்டு ரக மண்புழுக்களை (லேம்பிடோ மாரிசி) விட வேண்டும்.

புழுக்களை விட்ட உடன் லேசாக 15 நாட்கள் வரை தண்ணீர் தெளித்து வர வேண்டும். புழுக்கள் குப்பைகளைத் தின்று மண்புழு உரமாக ஓரளவு மாற்றி இருக்கும். மேலும் பேரலில் இட்ட வளமான மண்ணில் மண்புழுக்கள் மேலும், கீழுமாக சென்று துவாரங்களை உருவாக்கியிருக்கும். பின்னர் புழுக்கள் விட்ட 15 நாள் கழித்து பேரலின் மேல்பகுதியில் பானை அல்லது ஏதாவது ஒரு பாத்திரத்தில் நீர் நிரப்பி சொட்டு, சொட்டாக விழுமாறு ஒரு அமைப்பினை உருவாக்க வேண்டும். அதாவது மேல் இருந்து மண்புழுக்கள் மேல் சொட்டுசொட்டாக தண்ணீர் விழ வேண்டும். தினசரி 5 லிட்டர் நீர் சொட்டு சொட்டாக விழுமாறு ஏற்பாடு செய்ய வேண்டும். இவ்வாறு விழும் நீர் மண்புழு உரத்தின் மேல் உள்ள சத்துக்களையும், மண்புழு மேல் உள்ள திரவத்தையும் கழுவி எடுத்துக்கொண்டு, மண்புழு இட்ட துவாரத்தின் வழியாக கீழே வந்து அடியில் உள்ள ஒரு சிறு குழாய் வழியாக வெளியேறும். இவ்வாறு வெளியே வரும் நீர் தான் மண்புழு குளியல் நீராகும்.

இவ்வாறு வெளிவரும் நீரை அப்படியே தெளிப்பான் மூலம் பயிர்களுக்கு தெளிக்கலாம் அல்லது பாதிக்குப் பாதி தண்ணீர் கலந்து

அதாவது ஒரு லிட்டர் மண்புழு குளியல் நீருக்கு ஒரு லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் கலந்து தெளிக்கலாம். அவ்வப்போது பேரலில் உள்ள மண்புழு உரத்தை பாதி எடுத்துவிட்டு, மண் புழுவுக்கு உண வாக புதிய குப்பையை இடுவது மிகவும் அவசியம். இந்த அமைப்பை ஒரு வருடம் வரை அப்படியே வைத்திருக்கலாம். ஓராண்டு சென்ற பின் மீண்டும் பெரிய கல், சிறிய மணல், வளமான மண், குப்பை, ஆகியவற்றை இட்டு புழுக்களை இட வேண்டும். மேலும் 100 லிட்டர் மண்புழு செறிவூட்டப்பட்ட நீரில் 10 லிட்டர் பசு மாட்டு சிறுநீர் என்ற விகிதத்தில் கலந்து தெளித்தால் சத்துக்கள் கிடைப்பதோடு, பூச்சி விரட்டியாகவும் பயன்படுகிறது என்று சேலம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி கேட்டுக் கொண்டுள்ளார்.




# நெரிகம் ஊராட்சியில் ராபி பருவம் குறித்த விவசாயிகள் பயிற்சி



கிருஷ்ணகிரி, டிச.30

கிருஷ்ணகிரி மாவட்டம், சூளகிரி வட்டாரம், வேளாண்மை துறை மாநில விரிவாக்க திட்டங்களின் உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் (அட்மா) 2024-25ம் ஆண்டிற்கான நெரிகம் ஊராட்சியில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் ராபி பருவ கிராம வேளாண் முன்னேற்ற குழு குறித்த பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார்.




இக்கூட்டத்தில் ஊராட்சி மன்ற தலைவர் கங்காராஜ், அதியமான் கல்லூரி முதல்வர் ஸ்ரீதரன், கால்நடை உதவி மருத்துவர் வினோத், பட்டு வளர்ச்சித் துறை இளநிலை ஆய்வாளர் கிருஷ்ணே கவுடு, உதவி தோட்டக்கலை அலுவலர் திருமுருகன், உதவி வேளாண்மை அலுவலர் முனிராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வேளாண்மை உதவி இயக்குநர் கூறியதாவது கிராம முன்னேற்ற குழுவின் நோக்கம் செயல்படும் விதம், திட்டங்கள் மற்றும் மானியங்கள் மக்களிடையே சேர்த்தல், சிறு தானியங்கள் மற்றும் பயறு வகைகளின் பயன்கள் அதனால் நமக்கு ஏற்படும் நன்மைகள் குறித்தும், விவசாயிகள் சிறு தானியம் மற்றும் பயறு வகைகளை பயிரிட்டு மானியங்களை பெற்று கொள்ளலாம் என்று கூறினார்.

இதற்குண்டான விதைகள் மானிய விலையில் வேளாண் விரிவாக்க மையங்களில் கிடைக்கும் என்றும் விவசாயிகள் விதைப்பண்ணைகள் அமைத்து கூடுதல் இலாபம் அடையலாம் என்றும் கூறினார். கிராம வேளாண் முன்னேற்ற குழு சிறப்பாக செயல்பட்டு இயற்கை பண்ணையம் அமைத்து நோயற்ற வாழ்வும் இரட்டிப்பு இலாபம் அடையலாம். மேலும் ஒருங் கிணைந்த பண்ணையம் அமைப்பதன் மூலம் குறைந்த செலவில் இரட்டிப்பு இலாபம் அடையலாம் என்று கூறினார். இதற்கு கிராம வேளாண் முன்னேற்ற குழுவானது சிறப்பாக செயல்பட்டு மற்ற விவசாயிகளுக்கு முன்னோடிகளாக இருக்க வேண்டும் என்று கூறினார்.

அதியமான் கல்லூரி முதல்வர் ஸ்ரீதரன் கோடை உழவு செய்வதன் அவசியம் அதனால் ஏற்படும் பயன்கள் மண் மாதிரியின் பயன்கள் மற்றும் மண் மாதிரிகள் சேகரிக்கும் முறைகள் குறித்த செயல் விளக்கம் செய்து காண்பித்தார்.

கால்நடை மருத்துவர் வினோத், பட்டு வளர்ச்சித் துறை இளநிலை ஆய்வாளர் கிருஷ்ணே கவுடு ஆகியோர் தம் துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மானியங்கள் குறித்து விளக்கி கூறினர்.

உதவி வேளாண்மை அலுவலர் முனிராஜ் நடப்பாண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தில் பேட்டரி தெளிப்பான், ஜிப்சம், ஜிங்க்சல்பேட் மற்றும் தானியங்கள் மானிய விலையில் விநியோகிக்கப்படும் என்று கூறினார். உதவி தோட்டக்கலை அலுவலர் திருமுருகன் தோட்டக்கலை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள், மானியங்கள் இலவசமாக வழங்கப்படும். நாற்றுகள், மல்ச்சிங் ஷீட், நீர் சேமிப்பு தொட்டி, 5 வகையான பழ செடி தொகுப்பு மானிய விலையில் கிடைக்கும் என்று கூறினார்.

ஊராட்சி மன்ற தலைவர் கங்காராஜ் நம் நெரிகம் ஊராட்சிக்கு அரசு வழங்கிய கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மானியங்கள் மற்றும் இடுபொருட்கள் விவசாயிகள் வாங்கி பயன் அடையவேண்டும் என்று கூறினார்.

இறுதியாக இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு இடு பொருட்கள் மானிய விலையில் வழங்கப்பட்டது. இப்பயிற்சி யில் சொட்டு நீர் பாசன நிறுவனத்தார் கலந்து கொண்டனர்.

மேலும் பாரம்பரிய நெல் இரகங்கள் மற்றும் சிறு தானியங்கள் கண்காட்சி இடம் பெற்றிருந்தது.

உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் கா.ம.முஹம்மது ரஃபி மற்றும் பி.பழனிச்சாமி ஆகியோர் சொட்டு நீர் பாசனத்தின் பயன்கள் அரசு வழங்கும் மானியங்கள் குறித்து விளக்கி கூறினார்.

உழவன் செயலியின் பயன்கள் மற்றும் உழவன் செயலி விவசாயிகளுக்கு பதிவிறக்கம் செய்தும் உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட உரங்களின் பயன்கள் குறித்தும் விளக்கி கூறினார்கள்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

## தலைக் கவசம் உயிர்க் கவசம்



# தமிழ்நாட்டில் பூவிசார் குறியீடு பெற்ற வாழை ரகங்கள் பற்றி தெரியுமா?



வாழை உற்பத்தியில் இந்தியா உலகளவில் முதலிடம் பெற்றுள்ளது. ஆண்டுக்கு சராசரியாக 34.9 மெட்ரிக் டன் இந்தியாவில் உற்பத்தியாகிறது. இதில் தமிழகத்தில் மட்டும் சாரசரியாக 4.30 மெ.டன் உற்பத்தியாகிறது. நூற்றுக்கும் அதிகமான வாழை ரகங்கள் பயிரிட்டாலும் வணிக ரீதியாக 30 ரகங்களே உள்ளன. சில ரகங்கள் குறிப்பிட்ட பகுதியிலே பயிராகிறது.

வாழையின் சிறப்பு அம்சமாக அதன் நிறம் நறுமணம் மற்றும் அதிக வைப்புகாலத்தை பொறுத்து அதிகமாக பயிரிடப் படுகிறது. தற்போது இந்தியா அளவில் 8 பாரம்பரிய ரகங்கள் பூவிசார் குறியீடு பெற்றாலும் அதில் 3 தமிழகத்தில் பயிரிடப் படக் கூடிய வாழை ரகங்களாகும்.

**பூவிசார் குறியீடு என்ற என்ன?**

வேளாண் பயிர்கள் அல்லது உணவு பொருட்கள், நாட்டின் பிரத்யேகமாக ஓர் குறிப்பிட்ட பகுதியில் பயிரிடப்படுகிறது என்பதைக் காட்டும் அடையாள குறியீடே ‘பூவிசார் குறியீடு ஆகும். (GEROPHICAL INDEX) GI என அழைக்கப்படுகிறது.

**இந்தியாவில் எப்போது பூவிசார் குறியீடு தோன்றியது?**

இந்தியாவில் 2003 செப்டம்பரில் இந்த பூவிசார் குறியீடு (GI.TAG) தொடங்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. இதற்கென தனியாக பதிவு பாதுகாப்பு சட்டமும் உள்ளது. மத்திய அரசின் தொழில் துறை மேம்பாட்டு அமைச்சகத்தால் வழங்கபடு கின்றன.

**தமிழகத்தில் பூவிசார் குறியீடு பெற்ற வாழைகள் எது தெரியுமா?**

**1) விருப்பாட்சி ரகம்**

இதனுடைய GI.TAG NO 124- 2008


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

தமிழகத்திலுள்ள கீழ் பவானி மற்றும் சேர்வராயன் மலைகளில் பயிரிடப்படுகிறது. இந்த விருப்பாட்சி ரகத்தில் இனிப்பு அதிகம். அத்துடன் அதிக நறுமண வாசனை கொண்ட பழமாகும். இதனுடைய வைப்பு காலம் 10 முதல் 12 நாட்களாகும். இது புபுய மரபணு வகை சேர்ந்த பழம். காபி பயிருடன் ஊடுபயிராக பயிரிடப்படுகிறது. நிழல் தரக்கூடிய பயிராக வாழை பயிரிடப்படுகிறது. இந்த பழத்தை கொண்டு பழனி பஞ்சாமிர்தம் தயாரிக்கப்படுகிறது. ஏற்றுமதிக்கு உகந்த ரகமாகும்.

**2) மலை வாழை (சிறுமலை)**

GI TAG NO 126-2008

திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள சிறுமலையிலும் அதனுடைய அடிவாரத்திலும் பயிரிடப்படக்கூடிய பழம் இது. இதற்கு ‘ மலை வாழைப்பழம்‘ என்றும் பெயர் உண்டு. இந்த பழங்களில் அதிக அளவாக பொட்டாசியம் சத்துகள் நிறைந்து இருப்பதால் நரம்பியல் நோயாளிகளுக்கு உகந்த ரகமாக கருதப்படுகின்றது. அதிக இனிப்பு சுவை கொண்டது. இந்த வாழை 1971யில் முடிக்கொத்து நோயால் அதிகமாக பாதிக்கப்பட்டு உள்ளது. தாண்டிக்குடி, பண்ணைக்காடு, ஆத்தூர், ரெட்டியார் சத்திரம், பாச்சாலூர் பகுதியில் அதிகமாக பயிரிட்ட இந்த வாழை தற்போது அழிவில் உள்ளதாக தகவல். சாகுபடி பரப்பு நாளுக்கு நாளாக குறைந்து வருகிறது. காபி, எலுமிச்சம் பழ பயிருக்கு இடையே ஊடுபயிராக இந்த வாழை பயிரிடப்படுகிறது. இந்த சிறுமலை வாழைப்பழத்தை சாப்பிட்டால் சளி, ஜலதோசம் பிடிக்காது. மஞ்சள் காமாலை நோய்க்கு அருமருந்து. நீண்ட நாட்களானாலும் பழத்தின் தோல் கருக்கும் தவிர பழங்கள் அழுகாது. வைட்டமின் சி அதிகமாக உள்ள பழம்.

விருப்பாட்சியும் சிறுமலை பழமும் மலை வாழ் மக்களின் அடையாளமாக பார்க்கப்படுவதுடன் இந்த இரண்டும் பஞ்சாமிர்தம் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்க தகவலாகும்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்

**3) மட்டி வாழை பழம்**

GI TAG NO - 785 - 2023

இது குறிப்பாக நாகர் கோவில் கன்னியாகுமரி பகுதியில் காணப்படுகின்ற ரகமாகும். சுண்டு விரல் அளவுள்ள மட்டி ரக வாழை தேன் போன்று தித்திப்பாகவும் ஊர் முழுக்க நறுமணம் வீசும்.

இதில் பாரம்பரிய மட்டி, மலை மட்டி, செம்மட்டி, தேன்மட்டி ஆகிய வகைகள் இருந்தாலும்கூட பாரம்பரிய மட்டி ரக வாழைக்கு தான் பூவிசார் குறியீடு கிடைத்துள்ளது. அதிக ஊட்டச்சத்துகள் நிறைந்து இருப்பதால் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க உதவுகிறது. தனித்துவமான சுவையும் நறுமணமும் கொண்டது. எளிதாக ஜீரணமாக க்கூடியது. உடனடியாக ஆற்றல் (ENERGY) தரக்கூடிய தால் கைக் குழந்தைகளுக்கு மிகவும் உகந்த பழமாகும்.




**வேறென்ன ரகங்கள் இந்தியாவில் பூவிசார் குறியீடு பெற்று ரகங்களின் பெயர் தெரியுமா?.**

ரஞ்சன்கோடு ரசபாலே , கமலாபூர் செவ்வாழை, செங்காலிக் கோடன் ஜிங்கான் வாழை மின்டோலி .

தமிழகத்தில் பூவிசார் குறியீடு பெற்ற வாழைகளை அதிகமாக அந்தந்த பகுதியில் பயிரிட்டு ஏற்றுமதி செய்து அதிக வருமானம் பெறுவோம். இன்னும் அறியப்படாத ரகங் களுக்கும் பூவிசார் குறியீடு கிடைக்க ஏற்பாடு செய்வோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**


**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# பாக்கம் ஊராட்சியில் தேனீ வளர்ப்பு பயிற்சி



செங்கல்பட்டு, டிச.30

செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், பாக்கம் ஊராட்சியில் தேனீ வளர்ப்பு பற்றிய பயிற்சி வழங்கல் நிகழ்ச்சியை எஸ்.ஆர்.எம் வேளாண் அறிவியல் கல்லூரி முதல்வர் ஜவஹர் லால் மற்றும் கல்லூரியின் உதவி பேராசிரியர்கள் (விவசாய விரிவாக்கத்துறை) முனைவர் யூ.ராஜசேரன், முனைவர் பு.முஹம்மத் இக்ஷனுள்ளா, முனைவர் எம்.ஆர்.நவீன்குமார், முனைவர் குங்கும செல்வன், முனைவர் சஸ்மிதா மற்றும் உதவி பேராசிரியர் (வேளாண் வானிலையியல்) முனைவர்




செ.தாரணி இவர்களின் வழிகாட்டுதலின்படி இளங்கலை 4 ஆம் ஆண்டு மாணவிகள் பா.வர்ஷினி, ஜெ.ஆஸ்லின் நிர்மலா, தே.பிளசி, மூ.ஜெயவீனா, ர.வேதநாயகி, ர.ஹர்செண்டு, சி.மஞ்சுஸ்ரீ, சௌஜான்யா, ஜெ.காவ்யவர்ஹினி, கு.சுவேதா, ஹாரிகா பெருமாள், ச.க. ஜெயஸ்ரீ ஆகியோர் நிகழ்சியை சிறப்பாக நடத்தினர். ஊராட்சி மன்ற தலைவர் அமுல், முன்னிலையில் நடைபெற்றது. பூச்சியியல் துறை பேராசிரியர் D.காமராஜ் 'தேனீ வளர்ப்பு ' என்னும் தலைப்பில் மக்களுக்கு எளிதாக புரியும்படி சிறப்புரை அளித்தார். விவசாயிகள் இந் நிகழ்வில் கலந்து கொண்டு தங்களின் சந்தேகத்தை கேட்டறிந்தனர். இந்த நிகழ்ச்சி விவசாயிகளின் திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவிற்கு மிகப்பெரிய ஊக்கமளித்தது. தேனீ வளர்ப்பு தொடர்பான விழிப்புணர்வும் தொழில்நுட்ப உதவி களும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையில் அமைந்தது. இது பாக்கம் ஊராட்சியில் விவசாய முன்னேற்றத்திற்கான ஒரு முக்கிய நிகழ்வாக இருந்தது.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை
இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது.
அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# பருவத்திற்கு ஏற்ற பயிர் இரகங்களை விவசாயிகள் பயன்படுத்த வேண்டும்

## இராமநாதபுரம் விதை ஆய்வு துணை இயக்குநர் தகவல்

இராமநாதபுரம், டிச.31

பருவத்திற்கு ஒத்து வராத பயிர் இரகங்களின் விதைகளை தனியார் விதை விற்பனை நிறுவனங்கள் விற்பனை செய்யக் கூடாது என்று விதை ஆய்வு துணை இயக்குநர் ம.இப்ராம்சா தெரிவித்துள்ளார்.

**பயிர் இரகங்களின் விதைகள்**

இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களுக்கான விதை ஆய்வு துணை இயக்குநர் ம.இப்ராம்சா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது, இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் சாகுபடிப் பணிகள் நடைபெறு கின்றது. உண்மை நிலை விதைகள் தனியார் விதை விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்த விதைகளை வாங்கும் முன் இந்த ரகம் நம் பகுதியின் மண், பருவம், சீதோஷ்ண நிலைக்கு ஏற்றதா, பூச்சி நோய் தாங்கி வளரக் குகூடியதா, அதன் வயது என்ன? என்று பார்த்து வாங்குவது நல்லது.

இதற்கு முன்னர் தங்கள் பகுதியில் உள்ள விவசாயிகள் யாராவது இவ்வகையான இரகத்தை பயிரிட்டிருந் தால் அவர்கள் அனுபவத்தைக் கேட்டு பின் விதைப்பு அல்லது நடவு செய்வது நன்மை அளிக்கும். வேளாண்மைத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகளுடனும் கலந்து ஆலோசனை பெறலாம்.

விதை விற்பனையாளர்கள் தனியார் ரக உண்மை நிலை விதைகள் விற்பனை செய்யும் முன் தமிழ்நாட்டில் விற்பனை செய்ய பதிவு சான்றிதழ் பெறப் பட்டுள்ளதா மேலும் அதன் வயது, பருவம் ஆகியவற்றை தெரிந்து கொண்டு பின் விற்பனை செய்ய வேண்டும். பருவத் திற்கு ஒத்து வராத விதைகளை விற்பனை செய்யக்கூடாது.

விவசாயிகளிடம் விதை விற்பனை செய்யும்பாழுது கண்டிப்பாக உரிய ரசீது வழங்க வேண்டும்.


Rithvik Pipe®
PIPING FOR LIFE
UPVC PLUMBING PIPE | UPVC PRESSURE PIPE | WIRING PIPE | ASTM UPVC PIPE | WATER TANK
GARDEN HOSE | SUCTION HOSE | LATERAL HOSE
BIS
IS 4985 : 2021
IS : 4985
IS 9537
IS : 9537
LEAD-FREE
ISO : 9001
ONLY ISI PIPE MANUFACTURING COMPANY
LAB TEST REPORT VIA QR CODE
25 YEARS WARRANTY
20MM TO 250MM
MADE FROM FINE QUALITY RAW METERIALS
100% LEAD FREE PIPE
ONLY ISI PVC PIPE MANUFACTURING COMPANY
25 YEARS WARRANTY ON ABOVE 6 KG PVC PIPES.
20 MM TO 250MM IN ALL CLASSES AVAILABLE
PROVIDING TEST REPORT VIA QR CODE ON EACH PIPES.
Rithvik Pipe
FOR ENQUIRIES
7561822226
9645877771
Rithvik Pipe
@rithvikpipecompany
rithvikpipe@gmail.com

# விவசாயத்தில் நுண்ணுயிர் பாக்டீரியாக்களின் பங்கு

பாக்டீரியா விவசாயத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது, தாவர வளர்ச்சி, மண் ஆரோக்கியம் மற்றும் நிலையான விவசாய நடைமுறைகளுக்கு பங்களிக்கிறது. விவசாயத்தில் பாக்டீரி யாவின் சில பயன்பாடுகள் இங்கே காணலாம்.

**தாவர வளர்ச்சி ஊக்குவிப்பு**

**1. நைட்ரஜன் நிலைப்படுத்தல்**

ரைசோபியா, அசோடோபாக்டர் மற்றும் அசோஸ்பைரில்லம் போன்ற பாக்டீரியாக்கள் வளிமண்டல நைட்ரஜனை தாவரங் களால் பயன்படுத்தக்கூடிய வடிவமாக மாற்றுகின்றன.

**2. பாஸ்பரஸ் கரை திறன்**

சூடோமோனாஸ் மற்றும் பேசிலஸ் போன்ற பாக்டீரியாக்கள் பாஸ்பரஸை கரைத்து, தாவரங்களுக்கு கிடைக்கச் செய்கிறது.

**3. தாவர வளர்ச்சி சீராக்கிகளின் உற்பத்தி**

அசோஸ்பைரில்லம் மற்றும் சூடோமோனாஸ் போன்ற பாக்டீரி யாக்கள் ஆக்சின்கள் மற்றும் சைட்டோகினின்கள் போன்ற தாவர வளர்ச்சி சீராக்கிகளை உருவாக்குகின்றன.

**மண் ஆரோக்கியம்**

**1. மண் அமைப்பு மேம்பாடு**

பேசிலஸ் மற்றும் சூடோமோனாஸ் போன்ற பாக்டீரியாக்கள் எக்ஸோபோலிசாக்கரைடுகளை உற்பத்தி செய்கின்றன, அவை மண்ணின் அமைப்பு மற்றும் தண்ணீரைத் தாங்கும் திறனை மேம்படுத்துகின்றன.

**2. சிதைவு மற்றும் ஊட்டச்சத்து சுழற்சி**

சூடோமோனாஸ் மற்றும் பேசிலஸ் போன்ற பாக்டீரியாக்கள் கரிமப் பொருட்களை சிதைத்து, தாவரங்களை உறிஞ்சுவதற்கு ஊட்டச்சத்துக்களை வெளியிடுகின்றன.

**3.மண்ணின் உயிரியல் திருத்தம்**

சூடோமோனாஸ் மற்றும் ரோடோகாக்கஸ் போன்ற பாக்டீரியாக்கள் பூச்சிக்கொல்லிகள் மற்றும் கன உலோகங்கள் போன்ற மாசுபடுத்திகளை சிதைக்கும்.

**உயிரியல் கட்டுப்பாடு**

**1. தாவர நோய் கட்டுப்பாடு**

சூடோமோனாஸ் மற்றும் பேசிலஸ் போன்ற பாக்டீரியாக்கள் தாவர நோய்க்கிருமிகளைத் தடுக்கும் நுண்ணுயிர் எதிர்ப்பிகள் மற்றும் பிற சேர்மங்களை உருவாக்குகின்றன.

**2. பூச்சி கட்டுப்பாடு**

பேசிலஸ் துரிஞ்சியென்சிஸ் (Bt) போன்ற பாக்டீரியாக்கள் பூச்சிகளை கொல்லும் நச்சுகளை உற்பத்தி செய்கின்றன.

**3.நூற்புழுக் கட்டுப்பாடு**

சூடோமோனாஸ் மற்றும் பேசிலஸ் போன்ற பாக்டீரியாக்கள் நூற்புழுக்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும்.

**பிற பயன்பாடுகள்**

**1. உயிர் உரங்கள்**

பாக்டீரியா அடிப்படையிலான உயிர் உரங்கள் ரசாயன உரங்களை மாற்றும், சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கும்.

**2. பயோஸ்டிமுலண்ட்ஸ்**

பாக்டீரியா அடிப்படையிலான உயிரித் தூண்டிகள் தாவர வளர்ச்சியைத் தூண்டி பயிர் விளைச்சலை மேம்படுத்தும்.

**3.விவசாயக் கழிவு மேலாண்மை**

விவசாயக் கழிவுகளை மேலாண்மை செய்ய பாக்டீரியாவைப் பயன்படுத்தலாம், சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைக்கலாம்.

**விவசாயத்தில் பாக்டீரியாவின் பங்கு என்ன?**

பாக்டீரியாக்கள் மண்ணில் முக்கியமான செயல்பாடுகளைச் செய்கின்றன, மண்ணில் வெளியிடப்படும் நொதிகளிலிருந்து கரிம எச்சங்களை சிதைக்கின்றன. நான்கு முக்கிய மண் பாக்டீரியா செயல்பாட்டுக் குழுக்களை சிதைப்பவர்கள், பரஸ்பர வாதிகள், நோய்க்கிருமிகள் மற்றும் லித்தோட்ரோப்கள் என விவரிக்கிறது. ஒவ்வொரு செயல்பாட்டு பாக்டீரியா குழுவும் மண் ஊட்டச் சத்துக் களை மறுசுழற்சி செய்வதில் பங்கு வகிக்கிறது. இந்த அனைத்து பாக்டீரியா மருந்து மற்றும் உயிர் சத்து காரணிகளும் அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் கிடைக்கும்.

தகவல் தொகுப்பு : **கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், மாவட்ட ஆட்சியர் வளாகம், விருதுநகர்.** Email : agriari@gmail.com, Ph: 82480 80922.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# வேளாண்மை திருவிழாவிற்கு திருச்சி மாவட்ட விவசாயிகளை அழைத்துச் செல்ல சிறுகமணி கேவிகே ஏற்பாடு

திருச்சி, டிச.30

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, விருதுநகர் மாவட்டம், அருப்புக் கோட்டையில் நடைபெறும் மண்டல அளவிலான வேளாண்மை திருவிழாவிற்கு விவசாயிகளை அழைத்துச் செல்ல வாகன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையில் அமைந்துள்ள வேளாண்மை அறிவியல் நிலையம் மற்றும் மண்டல ஆராய்ச்சி நிலையத்தில் வருகின்ற ஜனவரி 4 மற்றும் 5, 2025 நாட்களில் பருவநிலை மாற்றமும் வேளாண் உற்பத்தியும் என்ற தலைப்பில் மண்டல அளவிலான வேளாண்மை திருவிழா, கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் மிகச்சிறப்பாக நடைபெற உள்ளது.

இந்த நிகழ்வைக் கண்டு பயன்பெற தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் திருச்சி மாவட்ட விவசாயிகளை நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு அழைத்துச் செல்ல வாகன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொள்ள ஆர்வமுடைய விவசாய பெருமக்கள் தங்கள் வருகையை ஜனவரி 3, 24 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குள் 0431-2962854, 90805 40412, 82484 85377, 91717 17832 என்ற எண்களில் அலுவலக நேரத்தில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது அல்லது 91717 17832 என்ற எண்ணிற்கு வாட்ஸ் அப் மூலம் முன்பதிவு செய்யவும். மேற்கண்ட தகவல்களை சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.ராஜாபாபு (91717 17832) தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# தேசிய உழவர் தினம் 2024 கொண்டாட்டம்

தேனி, டிச.30

தேனி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பாக தேசிய உழவர் தினம் - 2024 சத்திரப்பட்டி கிராமத்தில் 23.12.2024 அன்று கொண்டாடப்பட்டது.



இந்நிகழ்வில், கால்நடை விரிவாக்கக் கல்வித் துறையில் நடைபெற்றுவரும் தேசிய புத்தாக்க ஆய்வு திட்டம் வாயிலாக 'கறவைமாடுகளில் அறிகுறிகளற்ற மடிநோய் பாதிப்பு – ஒரு மரபுசார் மருத்துவத்தின் பகுப்பாய்வு' என்ற தலைப்பில் பயிற்சியும் செய்முறை விளக்கமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதில், தேனி கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் கு.பொன்னுதுரை 'கறவை மாடுகளில் அறிகுறிகளற்ற மடிநோய் – ஒரு மரபுசார் மருத்துவ தீர்வு' என்ற ஆராய்ச்சி இதழை வெளியிட்டு தலைமையுரை ஆற்றினார். தேனி கால்நடை பராமரிப்பு துறையின் மண்டல இணை இயக்குநர் மருத்துவர்ஆ.கோயில் ராஜா, கலந்துக் கொண்டு வேளாண் பெருமக்களுக்கு தனுவாஸ் தாதுஉப்பு கலவை மற்றும் கிராண்ட் ஊட்டசத்துகளை வழங்கி சிறப்புரை வழங்கினார்.



இந்நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக கறவை மாடுகளில் அறிகுறிகளற்ற மடிநோயைக் கண்டறியும் – மேம்படுத்தப்பட்ட கலிபோர்னியா மடிநோய் சோதனை செயல்விளக்கம் உழவர்களுக்கு செய்து காண்பிக்கப்பட்டு, ஓர் மரபுசார் மருத்துவமான கோவைச் செடியின் இலை பொடி வழங்கப்பட்டது. அதை கலப்பு தீவனத்துடன் தண்ணீரில் கலந்து ஐந்து நாட்கள் கொடுத்துவர கறவை மாடுகளில் அறிகுறிகளற்ற மடிநோய் பாதிப்பு குறைந்து பால் தெளிந்து, பால் உற்பத்தி அதிகரிப்பதை உழவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. மேலும், இந்நிகழ்ச்சியில் தேனி கால்நடை மருத்துவக் கல்லூரியின் ஆராய்ச்சியாளர்கள், பேராசிரியர்கள், தேனி உழவர் பயிற்சி மையத் தலைவர் மற்றும் தேனி கால்நடை பராமரிப்பு துறையின் உதவி இயக்குநர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இந்த நிகழ்ச்சியில் மொத்தம் 30 வேளாண் பெருமக்கள் பங்கேற்று பயனடைந்தனர்.

# தானியங்களின் சேமிப்புத்திறனை அதிகரிக்க உதவும் காப்பான் வசம்பு கரைசல்!

தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டங்களில் விவசாயிகள் பயறு சாகுபடி செய்து வருகின்றனர். ஆனால் அதிக அளவில் விளையும் பருவங்களில் குறைந்த விலைக்கு விற்று விடுகின்றனர். ஏனெனில் பயறு வகைகளை சேமிக்கும் பொழுது எண்ணற்ற பூச்சி தாக்குதல் மூலமாக தானியங்களுடைய மதிப்பு குறைந்து பொருளாதார சேதத்தை விளைவிக்கின்ற காரணத் தினால் இவ்வாறு நடக்கின்றது. இதனை தடுப்பதற்கு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் இயற்கை முறை காப்பானாக வசம்பு ஆறு சதவீதக் கரைசலை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.




இந்தக் கரைசல் பயறு வகை வண்டு, அரிசி கூன் வண்டு மற்றும் சிவப்பு மாவு வண்டு ஆகிய பூச்சிகளில் இருந்து ஆறு மாதங்கள் வரை பாதுகாக்கும் திறன் கொண்டது. இக்கரைசல் பூச்சிகளின் முட்டைகளை அழிக்கும் திறன் கொண்டது. பூச்சிகளின் இனப்பெருக்கத்தை தடுக்கிறது.

மேலும் விதை நேர்த்தி செய்த மூன்றாம் நாள் அனைத்து கேடுவிளைவிக்கும்பூச்சிகளையும் அழிக்கும் திறன் கொண்டது. மேலும், பூஞ்சாணக் கொல்லியாகவும் செயல்படுகிறது. இந்த வசம்புக் கரைசலை பயன்படுத்துவதால் பயறு வகைகளை அதிக நாட்கள் இரசாயன மருந்துகளை பயன்படுத்தாமல் சேமித்து வைக் கலாம். ஒரு லிட்டர் திரவத்தை பயன்படுத்தி 200 கிலோ பயறு வகைகளை நேர்த்தி செய்து சேமித்து வைக்கலாம்.

இதனை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வேளாண் அறிவியல் நிலையங்களை அணுகிப் பெற்றுக்கொள்ளலாம் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அ.சாகுல் அமீத் தெரிவித்தார்.